முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1622

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.03.2024**, வெள்ளிக்கிழமை

1. கருணையே வடிவான குரு அரங்கனே
   கலியுகத்தை காக்கவந்த ஞானதேசிகனே
   அழியாமை தந்து இந்த பேருலக மக்களை மீட்க
   அவதாரம் எடுத்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மாசி மாதம் 25 ம் நாள், 08.03.2024, வெள்ளிக்கிழமை)
   அவதார ஞானி உந்தனுக்குள்
   ஆறுமுகன் யான் ஆற்றலாக கலந்துநிற்க
3. பெருமைபட அரங்கனின் அவதாரம்
   பேருலகம் அறியஅறிய
   அறியவே உலகுக்கு மாற்றம்
   அரங்கன் அவதாரத்தால் நிகழக்கூடும்
4. பெருமைகொண்ட தொண்டர்படைகளை
   பேருலகமெல்லாம் அரங்கன் உருவாக்கி
   ஆக்கியே உலகத்தில் தர்மபலமோடு
   அறிவிப்பேன் ஞானவான்கள் சபை
5. வரும்காலம் ஞானசித்தர் காலம் கனியும்படி
   வல்லமைபட ஞானவான்கள் ஒன்றிணைய
   இணையவே ஞான ஆட்சிக்காலம்
   இயம்பிடுவேன் அரங்கன் அவதாரத்தால் நிகழக்கூடும்
6. கூடவே அன்னதனால் கலியுக மக்கள்
   குரு அரங்கன் பிரணவக்குடிலை நாடி
   நாடியே உலகோர் தர்மத்தில் உதவி
   ஞானம் பயின்று அரங்கன் சன்மார்க்க வழி

7. வழிதனில் தடையற தொடர்ந்து வந்து
வையகத்தில் உயர்சேவை ஆற்றினால் போதும்
தெளிவுபட உலகோர்க்கு ஞானிகளாகின்ற
திடமான வாய்ப்பு ஆறுமுகன் என்னால் கிட்டி

8. கிட்டியே உலகமெங்கும் ஞானிகள் படை
குறைவின்றி பெருகி பேருலகமெல்லாம்
ஞானிகள் வெளிப்படும் வண்ணம் இனிதே
ஞான ஆட்சி மலரக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—